முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

O.S.No.4/2022

PW1 மகேஸ்வரி நாள் 25.03.2024

**<u>5–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 2, 3 வாதிகளின் தாயார் என்றால் சரிதான். எனக்காகவும், 2, 3 வாதிகளுக்காகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் என்னுடைய திருமணத்திற்கு முன்பே சொத்தை கிரையம் வாங்கிவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4–ம் அயிட்ட சொத்தை கிரையம் வாங்கும்போது என் கணவர் உயிருடன் தான் இருந்தார். 4–ம் அயிட்ட சொத்தை 5–ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பிறகு தான் பங்கு கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். 4–ம் அயிட்ட சொத்தை 5–ம் பிரதிவாதி கிரையம் பெறுவதற்கு முன்பு சார் பதிவாளர் அலுவலகத்தில் நான் ஆட்சேபணை மனு கொடுக்கவில்லை. வாங்கிய பிறகு தான் கொடுத்தேன். 4–வது அயிட்ட சொத்தில் எனக்கு பாகம் இருக்கிறதா இல்லையா என்ற விவரம் 5–ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரிதான். 4–வது அயிட்ட சொத்தில் 5–ம் பிரதிவாதி விசாரித்து வில்லங்கம் ஏதும் இல்லை என்று தெரிந்து தான் சொத்து வாங்கினார் என்றால் சரிதான். 4–வது அயிட்ட சொத்தை 5–ம் பிரதிவாதி நல்ல பிரதி பிரயோஜனம் கொடுத்து கிரையம் வாங்கினார் என்றும், என்னை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 4–வது அயிட்ட சொத்தில் எனக்கு பாகம் கிடைக்காது என்றால் சரியல்ல. 2, 3 அயிட்ட சொத்துக்களை 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 1–ம் பிரதிவாதி எழுதி வைத்தார் என்றும், அதனால் ஏற்பட்ட பொறாமையால் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் மாமனார் 1–ம் பிரதிவாதி என்னுடைய நாத்தனார் 2–ம் பிரதிவாதியுடன் இருக்கிறார். என் மாமனார் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார் என்றால் சரியல்ல. என் மாமியார் 2013 ல் இறந்தார். என் மாமனார் உடல்நிலை சரியில்லாதது பற்றி எதுவும் என்னிடம் சொல்லமாட்டார். ஒரு வேளை எனக்கு 4–ம் அயிட்ட சொத்தில் பாகம் இருப்பதாக நீதிமன்றம் கருதினால் அந்த சொத்தை 2, 3 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் சேர்க்ககூடாத நபர்களை சேர்த்ததாலும், சேர்க்க

வேண்டிய நபர்களை சேர்க்காததாலும் தாவா பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு எந்த பரிகாரம் கிடைக்ககூடியது அல்ல என்றும், தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.